MR. SPEAKER : I will again put the Demand to the vote of the House. The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 97,68,700 under Demand IX—Head of State, Ministers and Headquarters staff'.

The Demand was put and carried and the grant was made.

VI.—STATEMENT BY THE HON. FINANCE MINISTER *RE* DISTURBANCES IN ANNAMALAI UNIVERSITY.

1.25 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM : சபாநாயகர் அவர்களே, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளைப் பற்றி மிகவும் வருத்தத்துடன் இந்த சட்டசபையில் சில தகவல்கள் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன். எனக்கு, 29, 30ம் தேதிகள் இரண்டு நாட்கள் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு செல்ல வேண்டிய வாய்ப்பு கிடைத்தது. இந்த நிகழ்ச்சிகள் நான் அங்கு இருந்தபோது நடந்தவைகள். இந்த சபையில் அவைகளைப் பற்றி தெரிவிக்கும்போது, அங்கு இருக்கக் கூடிய "வைஸ் சான்ஸலரின்" அறிக்கையையும், அங்கு இருக்கக்கூடிய கலெக்டரின் அறிக்கையையும் பெற்று அதிகாரபூர்வமான முறையிலே இந்த அறிக்கையைக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான் இன்று வரையில் கூட அது ஒத்தி வைக்கப்பட்டது. இல்லாவிடில் நேற்று நான் திரும்பி வந்தவுடனேயே அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி இந்த சபைக்கு தெரிவித்திருப்பேன். அந்த நிகழ்ச்சிகள் நடந்ததின் காரணமாக இன்று அந்த பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கிறது, கால வரையறையின்றி. அதனால் மாணவர்களுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் உணருகிறோம். ஆனால் சில சமயங்களில் ரொம்ப கடுமையான வியாதிக்கு கடுமையான வைத்தியம் செய்துதான் ஆகவேண்டும். அந்த முறையில்தான் அங்கு இருக்கக்கூடிய பல்கலைக் கழகத்தார் தீர ஆலோசனை செய்து இந்த முடிவிற்கு வந்திருக்கிறார்கள். இந்த முடிவிற்கு வேறு ஒருவரும், வெளியில் உள்ளவர்கள் பொறுப்பில்லை. அங்குள்ள "ஸிண்டிகேட்டே" இதைப் பற்றி ஆலோசித்து அவர்களின் முடிவின் பேரில்தான் அது மூடப்பட்டிருக்கிறது. அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நான் சொல்லும்போது, என்ன காரணத்தால் அந்த நிகழ்ச்சிகள் ஏற்பட்டன என்பதைப் பற்றி நான் இன்று ஆராயப்போவதில்லை. 29, 30 தேதிகளில் அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி மட்டும் குறிப்பிட்டு விட்டு இதுபற்றி என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும், இந்த மாதிரி நிகழ்ச்சிகள் இனிமேல் நடக்காமல் பார்த்துக் கொள்வதற்கும், இப்பொழுது நடந்த நிகழ்ச்சிகளுக்கு எந்த முறையில் பரிகாரம் காண வேண்டும் என்பதைப் பற்றியும் ஒரு சின்ன ஆலோசனை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்து விடலாம் என்று நினைக்கிறேன். 29-ம் தேதி நான் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருந்தபோது காலையில் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நிகழ்ச்சிகளில் மாணவர்கள் எல்லோரும் கலந்து கொண்டார்கள். ரொம்பக் கட்டுபாடாகவும், ஒழுங்காகவும் நடந்து கொண்டதைப் பார்த்து நான் ஓரளவு பெருமையும்கூட பட்டுக் கொண்டேன். அன்று இரவு மாணவிகள் விடுதியில் ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அந்த ஆண்டு விழாவில் விழாவிற்குப் பிற்பாடு சில கலை நிகழ்ச்சிகள் அங்கு ஏற்பாடு செய்திருந்தார்கள் அங்கு இருக்கக் கூடிய அரங்கிலே. அதைப் பார்ப்பதற்கு மாணவர்களும் வர வேண்டுமென்று விரும்பினார்கள். மாணவர்கள் விடுதியில் இருக்கக் கூடியவர்கள். இரவு 10 மணிக்கு மேல் வெளியில் இருப்பது என்றால் அதற்கு உத்தரவு பெற்றுக் கொண்டுதான் போக வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. ஆகவே, வார்டனிடம் இதைப் பற்றி தெரிவித்தபோது எல்லோரும் உத்தரவு பெற்று போகலாம் என்று தெரிவித்தார்கள். அநேகமாக எல்லா

மாணவர்களும் உத்தரவு வாங்கிக் கொண்டு போனார்கள். ஆனால் மூன்று நான்கு பேர்கள் மாத்திரம், எண்ணிக்கை அவர்களுக்கும் சரியாக தெரியவில்லை, அவர்கள் மட்டும் உத்தரவு எதற்கு வாங்குவது என்ற மனப்பான்மையுடன் அவர்கள் சென்றுவிட்டார்கள். அந்த நிகழ்ச்சிகள் இரவு 12 மணி வரையில் நடந்தது. அதோடுகூட இன்னொன்றும் தெரிவிப்பது மிக அவசியம். 12 மணி வரை கலை நிகழ்ச்சிகள் நடந்தபோது மாணவர்கள் ஒழுங்காகவும் கட்டுப்பாடுடனும் நடந்து கொண்டதைப் பார்த்து அங்குள்ள துணை வேந்தரிடம் நான் கூறிக் கொண்டிருந்தேன். மதராஸில் கூட மாணவர்கள் இப்படி கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும் நடப்பதை நான் பார்த்ததில்லை என்று பெருமையாக சொல்லிக் கொண்டேன். கண் பட்டு விட்டதோ என்னவோ, தெரியவில்லை. நிகழ்ச்சிகள் கழிந்து மாணவர்கள் விடுதிக்கு சென்றிருக்கிறார்கள். அப்படி அங்கு சென்றபோது, அனுமதி பெறாமல் போனவர்களை அங்கு காவல் இருந்த பணியாளர் வார்டனின் உத்தரவு பெற்று உள்ளே விடுவதாகச் சொன்னார். அதை ஏற்க மறுத்து விட்டார்கள். சுமார் 200 பேர்கள் அந்த காவலாளியை மீறி உள்ளே போக முயற்சித்ததின் காரணமாக ஒரு சிறு தகராறு ஏற்பட்டது. அந்தத் தகராறு ஏற்பட்டவுடன், நிகழ்ச்சிகளுக்குப் போய் விட்டு அப்பொழுது தான் திரும்பி வந்திருந்த வார்டனும், அவர்களும் விழித்திருந்தார்கள். அவரும் இன்னும் சிலரும் உடனே அங்கு சென்றார்கள். அங்கு போய் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறபோது அவர்கள் பேரில் மண்ணும், மணலும், தழைகளும் வீசப்பட்டது. அதற்குப் பிற்பாடு கற்களும் வீசப்பட்டது. அதனால் அவருக்கு சிறிது காயமும்கூட ஏற்பட்டது. உடனே, நிலைமை சமாளிக்க முடியாமல் போய்விடும் என்று நினைத்து அதிலிருந்து எப்படியாவது நழுவிட வேண்டுமென்று நினைத்து அவர்கள் வெளிப்பட்டு பக்கத்தில் இருக்கிற "கெஸ்ட் ஹௌஸ்" யை நோக்கிப் போனார்கள். அதைப் பார்த்துவிட்டு மாணவர்கள், "அவரை விடாதே", "பிடியுங்கள்" என்று சொல்லி அவரைத் துரத்திப் போக அவரும் அவசரம் அவசரமாக அங்கு போனார்கள். அப்பொழுது அங்கு டி.எஸ்.பி. யும் இருந்தார்கள். ஆகவே, அவர் அந்த இடத்திற்கு போய் விட்டார்கள்.

இந்த கூட்டத்தினர் அவரை அங்கே காணாததினால் அங்கு இருக்கக் கூடிய பூத்தொட்டிகளை எல்லாம் உடைத்துவிட்டு நேரே 200, 300 பேராக துணை வேந்தர் இருக்கக்கூடிய இடத்திற்கு இரவு $1\frac{1}{2}$ மணிக்கு வந்து சேர்ந்தார்கள். நான் அன்றைக்கு அங்கு தங்கி இருந்தேன். அவர்கள் போட்ட கூச்சலைக்கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன். ஏதோ அசம்பாவிதங்கள் நடந்துவிட்டதோ என்று நான்கூட நினைத்தேன். நான் அங்கே இருக்கக்கூடிய காரணத்தால் அங்கு ஓரளவு போலீஸ் பந்தோபஸ்து ஏற்பாடு செய்து இருந்தார்கள். அதன் பின் இவர்கள் ஏன் அங்கு வந்திருக்கிறார்கள் என்பதை விசாரித்து வரச்சொல்லி ஒரு ஆளை அனுப்பினார்கள் துணை வேந்தர் அவர்கள். அவர் போன சமயத்தில் துணை வேந்தரை கீழே வரச் சொன்னால்தான் வந்த காரணத்தை சொல்ல முடியும் என்று அவர்கள் அனுப்பின ஆளை திருப்பி அனுப்பி விட்டார்கள். அப்படியானால் அந்த மாணவர்களிலிருந்து ஐந்து பேரோ அல்லது ஏழு பேரோ வந்து தன்னை பார்க்கும்படி சொல்லி அனுப்பினார்கள். அதற்கும் அவர்கள் மறுத்துவிட்டார்கள். இதற்கிடையில் கீழே கூச்சலும், இரைச்சலும் அதிகமாகிக் கொண்டே வந்தது. அங்கே நின்றிருந்த போலீஸ்காரர்களையும் மீறி உள்ளே நுழைவதற்கும் அவர்கள் எத்தனித்தார்கள். இச் சமயத்தில் துணை வேந்தர் திரு. நாராயணசுவாமி பிள்ளை அவர்கள் நானே கீழே போய் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு கீழே போய் அவர்களை ரோடு பக்கம் அழைத்துக் கொண்டுபோய் அவர்களை விசாரித்தார்கள். "நீங்கள் கூச்சல் போடுவதினால் என்னுடைய தூக்கமும் கெட்டுவிட்டது, அதனால்கூட பாதகமில்லை, அதற்காக நான் கவலைப் படவும் இல்லை, மந்திரி அவர்கள் இங்கு நம்முடைய விருந்தினராக வந்திருக்கிறார்கள். அவருடைய தூக்கமும் கெட்டு விட்டது. இவ்விதம் கூச்சல் போடுவது அவர்களுக்கு அவமரியாதை செய்வது போல் இருக்கும், இவ்வளவு கூச்சல் போடுவதற்கு என்ன நடந்துவிட்டது, ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்து விட்டதா? அப்படியென்றால் அதை என்னிடம்

தெரிவியுங்கள், நான் அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியுமானால் நடவடிக்கை எடுக்கிறேன் " என்று அவர்களிடம் தெரிவித்தார்கள். அது மட்டுமல்ல, "மேலும் ஏதாவது உங்களுடைய குறைகளை தெரிவிக்கவேண்டுமென்றால் மறுநாள் காலையில் ஏழரை மணிக்கு உங்களில் ஏழு அல்லது எட்டு பேர் என்னுடைய காரியாலயத்திற்கு வாருங்கள், அப்போது உங்களுடைய குறைகளைப் பற்றி ஆலோசனை செய்யலாம் " என்று சொல்லி, " நீங்கள் எல்லாம் நேரடியாக சென்று மாணவர் விடுதியில் போய் படுத்துக் கொள்ளுங்கள், நீங்கள் எந்தவிதமான கூச்சலும் போடாமல், மேலும் எந்த விதமான சம்பவங்களும் ஏற்படாதவாறு போகவேண்டும்" என்று சொல்லி அனுப்பிவைத்தார்கள். இத்தனைக்கும் அவர்கள் எதற்காக அங்கு கூட்டமாக வந்தார்கள் என்ற காரணத்தை துணை வேந்தர் அவர்களிடம் சொல்ல மறுத்துவிட்டார்கள். இந்த விஷயத்தை எல்லாம் துணை வேந்தர் அவர்கள் என்னிடம் திரும்பி வந்து சொன்னார்கள். மறு நாள் காலையில் ஏழரை மணிக்கு பேசலாம் என்று சொல்லியனுப்பியிருக்கிறேன் என்றும் தெரிவித்தார்கள். அதன் பின்னால் நாங்கள் படுத்துக்கொண்டோம். இவ்வளவு சொல்லியனுப்பியதற்குப் பிறகும், மாணவர்கள் நேரே விடுதிக்கு செல்லாமல் வார்டன் வீட்டுக்கு சென்றிருக்கிறார்கள். அன்றைய தினம் வார்டன் வீட்டில் வார்டன் இல்லை என்று தெரியும், அங்கு பெண்களும் குழந்தைகளும்தான் இருக்கிறார்கள் என்று தெரிந்தும் அங்கே நின்றுகொண்டு கூச்சல் போட்டுக்கொண்டு, கற்களை வீட்டின் மேல் எறிந்திருக்கிறார்கள். அதோடு அங்கேயுள்ள ஸ்கிரீன் முதலியவைகளும் கிழித்து எறிந்து விட்டு அதன் பின்னால் கதவுகளையும் உடைத்து விடுவதற்கும் எத்தனித்துக் கொண்டு இருந்தார்கள். இவ்விதம் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே போய்விடுவார்களோ என்ற நிலைமை ஏற்பட்ட உடன் அங்கு இருந்த ரெவின்யு டிவிஷனல் ஆபீஸர், டி. எஸ். பி. இவர்கள் மாணவர்களை பார்த்து இவ்விதம் ஒன்றும் செய்யவேண்டாம், போய் விடுங்கள் என்று வற்புறுத்தி கேட்டு அங்கிருந்து போக செய்திருக்கிறார்கள். போகும் போதும் சும்மா போகவில்லை. போகும்போது அங்கிருந்த சில அலமாரிகளையும், பூத்தொட்டிகளையும் உடைத்து விட்டு திரும்பி விடுதிக்குப் போய் சேர்ந்திருக்கிறார்கள். மறுநாள் காலையில் எனக்கு வெளியில் போக வேண்டியிருந்தது. காலையில் ஏழரை மணிக்கு மாணவர்களுடன்பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது என்று சொல்லிவிட்டு, ஏற்கெனவே என்னுடன் வருவதாயிருந்த துணை வேந்தர் அவர்கள் வராமலேயே அங்கே தங்கிவிட்டார்கள். அதன்பின்னால் அங்கு அவர்கள் சொல்லியனுப்பியிருந்தது மாதிரி ஏழரை மணிக்கு வரவில்லை. சுமார் எட்டு மணிக்கு திரும்பவும் சுமார் 200, 300 பேர்கள் கூட்டமாக துணைவேந்தர் அவர்களுடைய ஜாகைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லியனுப்பியிருந்தது மாதிரி ஏழெட்டு பேராக வரவில்லை. அதோடு முந்தின நாள் இரவு நேராக விடுதிக்கு செல்லவேண்டும் என்று சொல்லியனுப்பினேன். ஆனால் இவர்கள் அவ்விதம் போகவில்லை. வார்டன் வீட்டுக்குப்போய் தவறாக நடந்திருக்கிறார்கள். ஆகவே நான் இவர்களுடன் பேசுவதற்கு தயாராக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்த விதமான பல காரியங்கள் நடந்து கொண்டு வருவதால் கலெக்டர் அவர்களை வரவேண்டும் என்று போன் செய்யப்பட்டது. நானும் கலெக்டர் அவர்களிடத்தில் இவ்விதம் இவர்கள் இராத்திரி ஒன்றரை மணிக்கு இவ்வளவு கூட்டமாகக் வருவதற்கு காரணம் என்ன என்பதை விசாரித்து சொல்லுங்கள் என்று கேட்டிருந்தேன். அதேபோல் தான் துணைவேந்தர் அவர்களும் இவர்களுக்கு ஏதாவது குறைகள் உண்டானால் அதை கேட்டு தெரிவியுங்கள் என்றும் அவர்களும் கேட்டிருந்தார்கள். இதை நான் வெளியே போய் விட்டு திரும்பி வந்த உடன் துணைவேந்தர் அவர்கள் தெரிவித்தார்கள். இரவு ஏன் இந்த மாதிரி கிளர்ச்சி செய்தார்கள்? இவ்வளவு தூரம் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு காரணம் என்ன என்பதை சொல்லுவதற்கு மாணவர்கள் மறுத்துவிட்டார்கள். அதோடு அவர்களுடைய கோரிக்கைகள் என்று சொல்லி இரண்டு காகிதங்களில் எழுதி கொடுத்திருந்தார்கள். அதில் உடனடியாக வார்டனை டிஸ்மிஸ் செய்ய வேண்டும், அதோடு அங்கிருந்த காவல்காரனையும் டிஸ்மிஸ் செய்யவேண்டும் என்று அதில் எழுதி

கொடுத்திருந்தார்கள். காவல்காரன் சரியாக இவர்களிடம் நடந்து கொள்ள வில்லை என்ற காரணத்திற்காகத்தான் இவ்வளவு தூரம் இராத்திரி இவ்வளவு கூட்டமாக வந்து கலாட்டா செய்திருக்கக்கூடும் என்று யாராலும் நம்ப முடியாது. இவ்வளவு நிலைமை ஏற்பட்டும் கூட என்ன காரணத்திற் காக இவ்வளவு கலாட்டா நடத்தினீர்கள் என்று எவ்வளவோ வற்புறுத்தி கேட்டும்கூட அதைப் பற்றி எந்தவிதமான தகவலும் அவர்கள் கொடுக்க வில்லை.

Sri A. V. P. ASAITHAMBI : கனம் தலைவர் அவர்களே பாயிண்ட் ஆப் ஆர்டர், கனம் அமைச்சர் அவர்கள் ரூல் 81—ன் கீழ் இந்த, பதிலை கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இராத்திரி மாணவர்கள் வைஸ்—சான்சிலரிடம் எந்தவிதமான காரணத்தையும் சொல்லவில்லை என்று தெரிவிப்பது தவறு. இவ்விதம் ஒருதலைப்பட்சமான பதிலை தெரிவிக்க லாமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

Mr. SPEAKER : மந்திரி அவர்கள் ரூல் 81—ன் கீழ் மாத்திரம் இந்த பதிலை கொடுக்கவில்லை, அட்ஜேர்ண்மெண்ட் மோஷனுக்கும் சேர்த்து தான் பதிலை சொல்லுகிறார்கள். இது ஒரு பொதுவான ஸ்டேட்மெண்ட்.

The Hon. Sri C. SUBRAMANIAM : நான் சொல்லுவது ஒருதலைபட்சமானது அல்ல, என்னிடம் இருக்கக்கூடிய அதிகாரபூர்வமான தகவல்களிலிருந்து சொல்லுகிறேன். ராத்திரி ஒன்றரை மணிக்கு இவ் வளவு கூச்சலுடன், இவ்வளவு ஆரவாரத்துடன் வருவதாக இருந்தால், அதற்கு என்ன காரணம் இருக்கவேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா ? அவர்கள் சரியானபடி சொல்லுவதாக இருந் தால் காவல்காரன் தவறாக நடந்து கொண்டான் என்று சொல்லியிருக் லாம். அதற்காக இவ்வளவு பேர்கள் கூட்டமாக எதற்காக வந்தார்கள் என்று அறிந்துகொள்வதற்கு வேண்டி துணைவேந்தர் அவர்களே கேட்டார் கள், மந்திரி அவர்கள் படுத்துத்தூங்கும்போது இவ்வளவு கூச்சல் போட்டுக் கொண்டு வரவேண்டிய காரணம் என்ன என்பதை திரும்ப திரும்ப அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ஒன்றும் சொல்லவில்லை. நான் இப் போதும் சொல்லுகின்றேன். காவல்காரன் தவறாக நடந்து கொண்டான் என்ற காரணத்துற்காகத்தான் இவ்வளவு கூட்டமாக அங்கு வந்தார்கள் என்று சொன்னால் நான் அதை ஒப்புக்கொள்ள தயாராக இல்லை. உண்மையிலேயே இவ்வளவு தூரத்திற்கு வைஸ்-சான்ஸிலர் அவர்களை மந்திரியையும் ஆட்டி வைத்த இவர்கள் வேலைக்காரன் தவறாக நடந்து கொண்டான் என்றால் அவர்களால் அதை சமாளிக்க முடிய வில்லை, அதற்காகத்தான் நாங்கள் அங்கு வந்தோம் என்று சொன்னால் அதை யாராவது நம்ப முடியுமா என்பதை நாம் யோசிக்கவேண்டும். நான் திரும்பவும் கலெக்டர் அவர்களிடம் கேட்டேன். இவ்வளவு பெரிய கிளர்ச்சி செய்து, ஏதோ ஒரு பெரிய கொலை நடந்து விட்டதோ என்று சந்தேகிக்கக்கூடிய அளவுக்கு ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்து விட்டதோ என்று நான் கூட நினைக்கவேண்டிய அளவுக்கு இவர்கள் அங்கு வரவேண்டிய காரணத்தை கண்டிப்பாக அறிய வேண்டும் என்று கலெக்டர் அவர்களிடம் கேட்டிருந்தேன். வேலைக்காரன் தவறாக நடந்து கொண்டதற்காகத்தான் இவ்விதம் அங்கு வந்தோம் என்று சொல்லு வதில் அர்த்தமே கிடையாது. அதை யாரும் நியாயம் என்று ஒப்புக் கொள்ள முடியாது. இவையெல்லாம் கழிந்த பிற்பாடு நான் கலெக்டர் அவர்களிடம் கேட்டபோது இதைதவிர வேறு ஒரு காரியங்களையும் விசாரிக்க முடியவில்லை என்று தெரிவித்தார்கள். இவ்விதம் எல்லாம் நடந்தும், நான் அடுத்த நாள் ஜெனரல் கவுன்ஸிலில் பேசுவதாக இருந்தது. அதில் இவைகளைப்பற்றி சொல்லலாம், அப்போது எல்லாம் சரியாக போய் விடும், இனிமேல் எல்லாம் சரியாக நடக்கும் என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் இதற்கிடையில் கலெக்டர் அவர்களிடம் அவர்கள் தங்களுடைய தவறை உணர்ந்து கொண்டு பேசியதாக தெரியவில்லை. அதற்கு பிறகு சுமார் இரண்டு, இரண்டரை மணிக்கு அங்குள்ள ஒரு ட்யூட்டர் வந்து அவர் களுடைய குறைகளை தீர்த்து வைக்கவில்லை என்றால் கூட்டத்தை நடத்த

விடப்போவதில்லை என்று சொன்னார்கள். இவ்வளவு தூரம் தவறு இழைத்திருந்தும் அதை அவர்கள் உணரவில்லை, அதோடு மேலும் தவறான காரியங்களுக்கே போகிறார்கள், ஆகவே அங்கு எனக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேனீர் விருந்தை ஒப்புக்கொள்வது சரியல்ல என்று என்னுடைய மனதில்பட்டது. அவர்கள் நடந்து கொண்டது தவறு என்று அவர்கள் உணர்ந்து அவர்கள் மனம் திருந்தாததைக் கண்டு, அதில் என்னுடைய அதிருப்தியை தெரிவிப்பதற்காக தேனீர் விருந்தை நான் ஒப்புக்கொள்ள தயாரில்லை, அதோடு நான் ஒப்புக்கொண்டிருந்தபடி பேசுவதற்கும் நான் தயாரில்லை என்று தெரிவித்து விட்டேன். இங்கு ஏதோ நிதிமந்திரி அவர்கள் பயந்து ஓடி வந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் தங்களுடைய தவறை உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காக எடுத்துக்கொண்ட முயற்சி ஒன்றும் பயனளிக்கவில்லை. அவர்களும் அதை திருத்திகொள்வதற்காக எந்தவிதமான முயற்சியும் செய்யயில்லை. அதற்குப் பிற்பாடு 5 அல்லது 5–15 மணியிலிருந்து துணைவேந்தருடைய வீட்டிற்கு முன்னாலே 200, 300 பேர் உட்காருவதற்கு ஆரம்பித்தார்கள். எந்தவிதமான கூச்சலும் போடவில்லை. அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். 30-ம் தேதி நான் பேசிய பொதுக்கூட்டத்தைப் ளைதப் பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். அந்த இடத்திற்கு நான் 6-30 மணிக்குப் போகும்பொழுது மாணவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இருட்டான பிற்பாடு விளக்குகளை உடைத்து வெளிச்சம் இல்லாமல் பண்ணிவிட்டு கற்களை எறிய ஆரம்பித்தார்கள். அந்த சமயத்தில் போலீஸ்காரர்கள் தடுத்து அந்த விதமான காரியம் செய்யக் கூடாது என்று சொல்லிக்கொண்டிருந்தார்களே யொழிய, எந்த விதமான பலாத்காரத்தை உபயோகிக்கவேண்டுமென்று யாரும் சொன்னது கிடையாது. அப்படி யாரும் உபயோகிக்கவில்லை. ஸிண்டிகேட் கூட்டம் ஒன்று அன்றைக்கு இரண்டு மணிக்குப் போடுவதாக இருந்தார்கள். அந்தக் கூட்டத்திலே கூட பலர் இப்பொழுது சர்வ கலாசாலையை மூடி, இதற்குப் பரிகாரம் கண்ட பிற்பாடு தான் திறக்கவேண்டுமென்று யோசனை செய்து கொண்டிருந்தார்கள். சிலர் இவ்வளவு கடுமையான வைத்தியம் செய்ய வேண்டுமா என்று சொன்னார்கள். எழு மணிக்கு ஒத்தி வைத்துக் கொள்ளலாமென்று சொன்னார்கள். ஆனால் ஸிண்டிகேட் மெம்பர்கள் போனபொழுது கல்லெறி விழுந்தது. ஆகவே, மூடுவது தான் சரி, இதற்கு வேறு வழியில்லை என்று அவர்கள் தீர்மானம் செய்தார்கள். அந்த நிலையில் 8–30 மணி சுமாருக்கு நான் பொதுக் கூட்டத்தை முடித்துக்கொண்டு அந்த ரோடு வழியாக துணைவேந்தருடைய வீட்டிற்கு, வந்து அங்கே சாப்பிட்டு விட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகலாமென்று வந்து கொண்டிருந்தேன். 100, 200 பேர்கள் அந்த ரோட்டிலே, நான் உள்ளே போகவேண்டிய கேட்டுக்கு கொஞ்சம் தள்ளி அங்கே நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கே இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் தான் இருந்தார்கள். பலர் தடியையும், கல்லையும் வைத்துக்கொண்டிருந்தாலும் " நம்மை ஒன்றும் செய்யமாட்டார்கள் " என்ற தைரியத்தில்—ஏனென்றால் நான் போகக்கூடிய கார் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், அதற்கு மாலை போட்டிருந்தது, அந்தக் காரைத்தான் அன்றையதினமும், அதற்கு முந்திய தினமும் உபயோகித்துக் கொண்டிருந்தேன், தவிர அதற்கு முன்னால் ஒரு ஜீப் கார் போய்க்கொண்டிருந்தது—வேறு யாராவது வருகிறார்களோ என்று தப்பு அர்த்தம் கூட செய்துக்கொள்ள முடியாது, ஆகவே கல்லைப் போட மாட்டார்கள், அமைதியாக இருப்பார்க்கள் என்ற நம்பிக்கையுடன் தான் காரிலே வந்தேன். காரை நிறுத்தவேண்டாம், நேராகப் போகாலாமென்று சொன்னேன். கற்களும், தடிகளும் ஏராளமாக என் கார் மீது வீசப்பட்டன. அதோடு என்னைத் தொடர்ந்து பின்னாலே வருவதற்கு முயற்சி செய்தார்கள். கலெக்டரும், டி. எஸ். பி. யும். இனிமேல் நிலைமை மீறிப்போய் விடும் என்று நினைத்து, அவர்கள் " பியூகிளை " ஊதி நீங்கள் போய்விட வேண்டுமென்று சொல்லி, அடிதடி செய்யக்கூடிய மாதிரி பாவனை செய்யப்பட்டது. அடிபட்டது 2 பேருக்குத் தான். கனம் அங்கத்தினர் சொன்னது போல் 5 பேருக்கல்ல. நான் போலீஸ்காரர்களிடத்தில் " மாணவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் ஒரு சிறிய நிகழ்ச்சி நேர்ந்தாலும், அது

தொடர்ந்து போய், ரொம்பவும் விபரீதமாகப் போய்விடும், ஆகவே எந்த சமயத்திலும் தடியடிப்பிரயோகம் செய்யக்கூடாது, எந்த பலாத்கார நிகழ்ச்சியிலும் நீங்கள் மாணவர்களை உட்படுத்தக் கூடாது" என்று சொல்லியிருந்தேன். ஆகையால் தான், அவர்கள் முயற்சி செய்தும் மாணவர்கள் போகாததினால், இதில் 2 பேருக்குத் தான் அடிப்பட்டது. 5 பேருக்கல்ல. சாதாரண "சிராய்ப்பு" காயம்தான். அவர்கள் ஆர்பாட்டம் செய்து திரும்பிப் போய்விட்டார்கள். திரும்பிப்போனவுடன் நிற்கவில்லை. ஆர்ச்சுகளுக்குத் தீ வைத்துவிட்டு, பல புத்தகங்கள் வைத்திருக்கும் அலமாரிகளை உடைத்துவிட்டு, ரூம்களுக்குச் சென்று கண்ணாடி சன்னல்களை உடைத்துவிட்டு, மேஜை நாற்காலிகளை உடைத்துவிட்டு பல "கேட்" களை பிடுங்கிக் கிணற்றில் போட்டுவிட்டு பெரிய ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் போட்டோ எடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அங்கத்தினர்களும் பார்க்கலாம். அங்கு அவர்கள் செய்திருக்கிற ஆர்ப்பாட்டத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கிற விளைவை ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். இன்னொன்றும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன். துணை வேந்தரைப் பார்க்கப் போவது சரி. ஆனால் அங்கே இருக்கும் செடிகள் என்ன செய்தன? அங்கே இருக்கக்கூடிய அநேகம் செடிகள் எல்லாம் பிடுங்கி எறியப்பட்டிருந்தன. அந்தமுறையில் அவர்கள் அங்கே சென்று அநேகவிதமான சேதங்களை விளைவித்திருக்கிறார்கள்.

பத்தரை மணிக்கு டிரெயின் டைம். நான் 10 மணிக்குப் புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன். மறுபடியும் இன்னொரு கூட்டம் வழி மறிக்கக் கூடிய வகையில் அங்கே நின்று கொண்டிருந்தது. நான் வடக்கே திரும்பிப் போக வேண்டும். தெற்கே தள்ளி 200 பேருக்கு மேல் நின்று கொண்டிருந்தார்கள். "என்னைப் பொறுத்த வரையில் பந்தோபஸ்து தேவையில்லை, ஒரு சமயம் நான் போனதற்குப் பிற்பாடு போலீஸ்காரர்கள் போய்விட்டார்கள் என்று நினைத்து இவர்கள் மேலும் இங்கு "கலாட்டா" செய்வதற்கு முயற்சிக்கலாம், எனக்குப் பின்னால் போலீஸ் தேவையில்லை, நான் சமாளித்துக் கொண்டு செல்வேன்" என்று சொல்லிவிட்டு நானும், டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்டிரக்ஷன் ஸ்ரீ சுந்தரவடிவேலுவும் போனோம். என்னுடைய சாமானை ஏற்றிக்கொண்டு ஒரு கார் பின்னால் வந்தது. 100 கெஜம் போன பிறகு அங்கே ஒரு கேட் இருக்கிறது. அந்த கேட்டைத் தாண்டித்தான் போகவேண்டும். எஞ்சினயரிங் காலேஜ் அதற்குப் பக்கத்திலிருக்கிறது. அதுவரையிலும் அந்தக் கல்லூரி மாணவர்கள் இதிலே எந்தவிதமான பங்கும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் நான் போகிறபொழுது அந்த கேட்டை மூடி வைத்துக் கொண்டு அதற்குப் பின்னால் கொஞ்சம் பேர் நின்றுகொண்டு வழி மறித்துவிட்டார்கள். திரும்பிப் போனால் கோழை என்று சொல்லுவார்கள். நின்றால் அதைத் தொடர்ந்து அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் ஏற்படுமென்று நினைத்து, "நாளைக்கு நான் சென்னையில் இருக்க வேண்டும், அசெம்பிளிக்குப் போக வேண்டும், தவிர்க்க முடியாத காரணங்கள் இருந்தாலொழிய போக வேண்டும்" என்று சொன்னேன். "எங்களுடைய குறைகளை நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள். "இது வரையிலும் ஒருவரும் என்னிடம் சொல்லுவதற்கு வரவில்லை. சர்வகலாசாலையைப் பொறுத்தவரையில் அது ஒரு 'ஆட்டானமஸ் பாடி'. ஆகையால் நான் இதிலே தலையிடுவது தவறு. உங்களுக்கும், நிர்வாகத்துக்கும் தகராறு இருக்கிறது என்றால், இரண்டு பேர்களும் ஒப்புக்கொண்டு, நீங்கள் பாருங்கள் என்று என்னிடம் சொன்னால் முறையே தவிர, நான் கல்வி மந்திரி, எனக்கு அதிகாரம் இருக்கிறது, துணை வேந்தர் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தலையிடுகிறேன் என்று சொல்வது தவறு என்பதை நான் உணர்ந்திருந்தேன். அப்படியிருக்கும் பொழுது எப்படி இதிலே தலையிட முடியும்" என்று சொன்னேன். "எங்களுக்கு தெரியாது, எது வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்று அவர்கள் சொன்னார்கள். திரும்பி துணை வேந்தருடைய வீட்டுக்கு வரவேண்டியதாய் இருந்தது. அங்கே ஒரு "ஆர்ச்" இருக்கிறது. அந்த ஆர்ச்சை இடித்துத் தள்ளி, கேட்டுகளைப் பிடுங்கித் தள்ளி, ஒருவரும் அந்த வழியாக போகமுடியாமல் தடுத்துவிட்டார்கள். ஸ்ரீ ஆசைத்தம்பி வந்தபொழுது எப்படி யிருந்ததோ

என்னமோ தெரியாது. இரண்டு ஸிண்டிகேட் மெம்பர்கள் வந்தபொழுது அவர்கள் மேல் கல்லை எறிந்தார்கள். காலை 6 மணிக்கு எஞ்சினியரிங் கல்லூரி பிரின்ஸிபால் போய் வாதாடி, அவர்களை கேட்டு, காரிலே சென்னைக்கு வரவேண்டியதாய் இருந்தது. "கல்வி மந்திரி அங்கே இருந்து காரியத்தைச் செய்திருக்கக் கூடாதா" என்று ஸ்ரீ ஆசைத்தம்பி அவர்கள் கேட்டார்கள். செய்திருக்கலாம், இரண்டு பேரும் ஒப்புக்கொண்டிருந்தால். மாணவர்கள் என்னிடம் பேசியிருக்கலாம். துணைவேந்தரும் என்னிடம் கேட்டிருக்கலாம். "நீங்கள் இதிலே தலையிடுவது எங்களுக்கு சம்மதம், நீங்கள் இங்கே இருக்கிறீர்கள், இதைப் பார்த்து முடிவு செய்யுங்கள்" என்று சொல்லியிருந்தால், நானும் செய்திருப்பேன். இரண்டு பேரும் சொல்லாத நிலையில் என் தலைமேல் அட்சதையைப் போட்டுக்கொண்டு, நான் தலையிடுவது தவறு என்று எனக்குத் தோன்றிவிட்டது.

அதற்குள் சர்வகலாசாலையை மூடிவிடுவது என்று ஸிண்டிகேட் முடிவு செய்து அவர்கள் கலைந்து போய்விட்டார்கள். மறுபடியும் மாணவர்கள் வெளியே போகவேண்டாம், வெளியே போகமுடியாது என்று அவர்கள் பிடிவாதமாக இருப்பார்களேயானால், அதன் மூலம் விபரீதமான விளைவுகள் ஏற்படுமென்று நினைத்து, பலாத்காரம் என்கிற பேச்சே வராமல், அதை முடிக்கவேண்டுமென்று கலெக்டர், டி.எஸ்.பி. அவர்களிடத்தில் யோசனை சொல்லிவிட்டு, அந்த சமயத்தில் அங்கே செய்யவேண்டிய காரியம் வேறு ஒன்றும் இல்லாத காரணத்தால்,—நான் இன்னும் அங்கே இருந்தால் அந்தப் பக்கத்திற்கு வரவேண்டும் என்று நினைப்பார்களோ என்று கூடத் தோன்றியது—நான் புறப்பட்டு வந்தேனே யொழிய வேறு ஒன்றுமில்லை.

அதற்குப் பிற்பாடு பல சேதங்கள் நடந்திருக்கின்றன. அடுத்த நாள் இன்னும் போலிஸ் படை அதிகமாக்கப்பட்டது. எப்பொழுதுமே படை சின்னதாக இருந்தால், இவர்கள் என்ன பண்ணிவிடுவார்கள், இன்னும் அதிகமாக பலாத்காரம் செய்யவேண்டுமென்ற உணர்ச்சி தோன்றுவது உண்டு. ஆகையால், ஒன்றுமே செய்யாமல், படையின் எண்ணிக்கையை மாத்திரம் அதிகமாக வைத்திருப்பதைப் பார்த்தே, மற்றவர்கள் எந்த விதமான நிகழ்ச்சியிலும் ஈடுபடாமல், அவர்களாகவே வெளியே போக வேண்டுமென்ற நிலைமை ஏற்படுமென்று கருதி, திருச்சி, தஞ்சையிலிருந்து அதிகமாகப் போலீஸ் படை வரவழைக்கப்பட்டது. அதற்குப் பிற்பாடு எந்த விதமான விபரீத விளைவும் இல்லாமல், மாணவர்கள் ஹாஸ்டலை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்று தகவல் கிடைத்திருக்கிறது. ஒரு சில பெண் மாணவிகளும் போயிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலான பெண் மாணவிகள் அங்கே இருக்கிறார்கள். நிலைமை சீர்திருந்திய பிறகு, அவர்களை ரெயில் ஏற்றி அனுப்பவேண்டுமென்று நினைத்திருக்கிறார்கள். இவை தான் எனக்குத் தெரிந்த வரையில் நடந்த விஷயங்கள். இது ஒரு வியாதியின் சின்னமே ஒழிய வேறு ஒன்றும் இல்லை. அதன் மூல காரணம் என்ன என்று அறிந்து அதை நீக்க வேண்டியது எல்லோருடைய பொறுப்பு. யார் இதைச் செய்வது என்பது யோசித்துப் பார்க்க வேண்டிய விஷயம். பல்கலைக் கழக நிர்வாகமே இதை செய்ய வேண்டுமா அல்லது நாம் செய்ய வேண்டுமா என்பதை யோசிக்கவேண்டும்.

இது பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட விஷயமாதலால் நான் கல்வி மந்திரி என்ற முறையிலோ அல்லது வேறு முறையிலோ முடிவு செய்வதாக உத்தேசம் இல்லை.

கல்வி சம்பந்தப்பட்டவரை ஆலோசனை சொல்வதற்கு ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும் என்று நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன். இதில் யார் யார் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களுடைய சம்மதத்தை தெரிவிக்கும்படி கேட்டிருக்கிறேன். அந்தக் கமிட்டியைக் கூப்பிட்டு, இந்த விஷயங்களையெல்லாம் அவர்கள் முன் வைத்து "இந்த வியாதிக்கு காரணம் என்ன, இதை எப்படி தவிர்ப்பது" என்று அந்தக் கமிட்டி ஆலோசனை சொன்னால், அந்த அடிப்படையில் உருவான ஆலோசனையை எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கலாம். இப்பொழுது இதில் உட்புகுந்து, இதற்கு உட்காரணங்கள் என்ன என்று

1st April 1958] [Sri C. Subramaniam]

நான் இப்போது ஆராய வேண்டிய அவசியம் இல்லை. இதை எல்லோரும் ஒப்புக் கொண்டால் கமிட்டிக்கு முன் பரிசீலனைக்கு வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் இங்கு இருப்பதைப்பற்றி எனக்கு சந்தோஷம். பல்கலைக் கழகத்தினரே இதில் முடிவு செய்து கொள்கிறோம் என்று சொன்னால் நாம் இதில் தலையிடவேண்டிய **அவசியம்** இல்லை. இதில் இருக்கக்கூடிய விஷயம் எல்லா பல்கலைக் கழகங்களையும் சேர்ந்தது. இங்கு வேண்டுமானால் அது கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். பல இடங்களில் இம்மாதிரி இருக்கக்கூடிய சின்னங்கள் தேசத்தில் பரவிக் கொண்டிருக்கின்றன. இது பெருவாரியாக பரவாமல் தடுக்க வேண்டியது நமது கடமை. மாணவர்களுக்காக நாம் செய்ய வேண்டியகடமை. தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் நாம் செய்ய வேண்டிய கடமையாக இருக்கிறது. இதை எல்லோரும் ஒப்புக்கொண்டால், இதனுடைய காரணத்தை கண்டுபிடித்து இதற்கு ஒரு பரிகாரம் தேடலாம். இந்த பல்கலைக் கழகம் எந்த காரணத்தினால் மூடப்பட்டது என்பதை தெரிவித்தேன்.

அங்கு எடுக்கப்பட்ட படங்கள் இங்கு இருக்கின்றன. இவைகளைப் பார்க்கும் போது என் மனது மிகவும் வருத்தம் அடைகின்றது. ஒரு ஆசிரியர் அங்கு வார்டனாக இருக்கிறார். இவருக்கு சற்று காது மந்தம். இவரைப் பற்றி ஒரு படம் போட்டு அதன் கீழ் "செவிடன் ஒழிக" என்று எழுதியிருந்தது. இன்னொரு இடத்தில் "மட வார்டனே, செவிடனே, உள்ளே வராதே" என்று எழுதப்பட்டிருந்தது. அங்கு இருக்கும் மாணவர்கள் குருவுக்கு செய்யும் மரியாதை இது தான்!

மற்றொரு இடத்தில் '**This Varsity**' **has gone to dogs**. என்று எழுதப் பட்டிருந்தது. வாஸ்தவம். நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் யார் இதற்கு காரணம் என்று பார்க்க வேண்டும். இன்னும் கொஞ்சம் தூரத்தில் **Set fire to it and start fiddling**' என்று எழுதப்பட்டிருந்தது.

எனக்கு மிகவும் வருத்தத்தை கொடுத்தது ஒரு விஷயம் தான். இதைப் பற்றி எல்லோரும் வருத்தப்படுவார்கள் என்று நினைக்கிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிப்பதற்கு காரணமாக இருந்தவரும், தம்முடைய சொத்தில் பெரும் பகுதியை கொடுத்தவருமான ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய பெருமைகளைப் பற்றி நான் இங்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர் ஞாபகார்த்தமாக ஒரு சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அது இன்னும் பூர்த்தி அடையாமல் இருக்கிறது. அதற்கு ஒரு திரை போட்டு வைத்திருந்தார்கள். அதற்கு தீ வைத்து பங்கம் விளைவித்திருக்கிறார்கள். இது இப்படியே போய்க் கொண்டிருந்தால் எந்த நிலைமைக்கு கொண்டு போய்விடுமோ என்று எனக்குச் சொல்லத்தெரியவில்லை. இதில் உள்ள பொறுப்பை எல்லோரும் உணர்ந்து, இதை தவிர்ப்பதற்கு ஒரு பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு நான் சொல்ல வேண்டியதை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : As I said this morning, hon. Members, Sri A. Govindasamy, Sri Karunanithi and Sri N. K. Palanisami have given notice of adjournment motions to discuss an urgent matter of public importance, viz., injury to five students by the Police lathi charge and arrest of 15 students of Annamalai University when they wanted to see the Education Minister and Vice Chancellor of Annamalai University camping at Annamalai Nagar on 30th March 1958 and the serious situation arising therefrom.

The admissibility of the adjournment motions is governed by rule 49. One of the conditions is that the matter raised must involve more than the ordinary administration of law. The notices received do not state the circumstances under which the Police

[Mr. Speaker] [1st April 1958

had to resort to the lathi charge and arrest 15 students of the Annamalai University on 30th March 1958. After hearing the Hon. Minister for Education, I am satisfied that they do not involve more than the ordinary administration of law. It has been ruled in this Assembly on previous occasions, e.g., on 15th July 1953, that arrest of persons and lathi charge do not involve more than the ordinary administration of law. I therefore feel that under the rules, the motions cannot be allowed and I therefore do not give permission for moving the adjournment motions.

Also the hon. Members Sri T. S. Ramaswamy Pillai and Sri A. V. P. Asaithambi have given notice of motions under rule 40. In view of the statement of the Hon. Minister for Education, I rule those motions also out of order.

I adjourn the House till 8-30 to-morrow morning.

1-57 p.m. The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory rules, orders and notifications.

89. *Notification issued with G.O. Ms. No.* 3176, *dated* 7*th December* 1957 *amending rule* 80-*A of the Madras Motor Vehicles Rules*, 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939.]

90. *Notification issued with G.O. Ms. No.* 3396, *Home, dated* 28*th December* 1957, *amending rules* 19, 24 *and* 28 *of the Madras Children Rules*, 1940.

91. *Notification issued with G.O. Ms. No.* 549, *Home, dated* 6*th March* 1958 *amending rule* 56 *of the Madras Cinemas* (*Regulation*) *Rules*, 1957. [*Laid on the Table of the House under section* 82 (2) *of the Madras Cinemas* (*Regulation*) *Act*, 1955 (*Madras Act IX of* 1958).]

B. Reports and other papers.

47. *Report of the Committee of Privileges* (" *What happened in Mudukalathur?* " *Case*)

48. *Report of the Committee of Privileges regarding the definition of the term* " *Precincts of the House*".

49. *Report of the Committee on Estimates on Community Development Projects* (*First Report—Second Assembly*).